**செய்தி வெளியீடு எண்:576** **நாள்: 03–10–12**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2.10.2012 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி திரு.ரா.முரளி அவர்களுக்கு செயற்கை கால் பொருத்துவதற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 1 லட்சத்து 25 ஆயிரத்து 96 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த திரு. ரா. முரளி என்பவர் சாலை விபத்தில் அவரது வலது கால் துண்டிக்கப்பட்டு விட்டதாகவும், இந்தத் துண்டிப்பு 80 சதவிகிதத்திற்கும் அதிகமாக உள்ளதால், சாதாரணமாக பொருத்தப்படும் செயற்கை கால் தனக்கு பொருந்தாது என்றும், 80 சதவிகித ஊனத்திற்கு பொருத்தமான செயற்கை காலினை பொருத்துவதற்கு 1 லட்சத்து 25 ஆயிரத்து 96 ரூபாய் தேவை என்றும், ஏழ்மை நிலையில் வாழும் தன்னால் அத்தொகையைச் செலுத்தி செயற்கை கால் பொருத்த இயலாத நிலையில் உள்ளதாகவும், தனக்கு செயற்கை காலினை பொருத்த நிதியுதவி வழங்க வேண்டுமென்று 13.9.2012 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஸ்ரீரங்கத்திற்கு வருகை தந்த போது, நேரில் கோரிக்கை மனுவினை அளித்தார்.

அக்கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாற்றுத் திறனாளி திரு.ரா.முரளி அவர்களுக்கு செயற்கை கால் பொருத்துவதற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 1 லட்சத்து 25 ஆயிரத்து 96 ரூபாய் வழங்க உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திரு. ரா. முரளி அவர்களுக்கு செயற்கை கால் பொருத்துவதற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருது 1 லட்சத்து 25 ஆயிரத்து 96 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட திரு. ரா. முரளி அவர்கள், தனது வலது கால் துண்டிக்கப்பட்டு மீண்டும் நடக்க முடியாது என்ற சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் செயற்கை கால் பொருத்த நிதியுதவி வேண்டி கோரிக்கை விடுத்த சில நாட்களிலேயே செயற்கை கால் பொருத்துவதற்கான முழுத்தொகையையும் வழங்கி மீண்டும் நடமாடுவதற்கு உதவியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 3.10.2012,